2023 மார்ச் 28] [*முனைவர் பழனிவேல் தியாக ராஜன்*]

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
48	*போக்குவரத்துத் துறை*	*2,195,98,87*	*759,60,89*	*9*
49	*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை*	*79,95,34*	*1,11,50*	—
50	*ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்*	*26*	—	—
51	*இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு*	*559,61,68*	—	—
52	*மாற்றுத் திறனாளிகள் நலத் துறை*	*101,60,96*	*14,51,06*	—
53	*சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை*	*4*	—	—
54	*வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)*	*97,41,44*	*80,02,92*	—
பெருமொத்தம்		**19,690,97,42**	**3,615,66,33**	**2,934,22,69**

4. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி), 2022-2023, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2022–2023 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

MESSAGE

"In pursuance of clause (2) of Article 205, read with clause (3) of Article 203 of the Constitution of India, I, R.N. Ravi, Governor of

Tamil Nadu, hereby give my recommendation, to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the financial year 2022–2023."

முற்பகல் 11–15

5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி), 2022–2023, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022–2023 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022–2023 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28–3–2023 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதி துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2022–2023 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.